***கவனிக்க.**-2025.06.13ஆந் திகதிய 2441 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II ( தமிழ் மொழி மூலம்) மற்றும் பகுதி IV (அ) ( தமிழ் மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2442 - 2025 ජූනි මස 20 වැනි සිකුරාදා - 2025.06.20

2442ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 20ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II ஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 844 |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 845 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 848 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025,யூலை மாதம் 11ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, யூன் மாதம் 27ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்( பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

843 - B 82692 - 403 (2025/06)

# ஆயவிற்பனையும் குத்தகையும்

## 2026 ஆம் ஆண்டுக்கான குருநாகல் பிரதேச செயலகப்பிரிவின் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை

2 026, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2026, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும், 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் மதுவரி ஆணையாளரினால் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும், 2025, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை குருநாகல் பிரதேச செயலகப் பிரிவினால் கேள்விகோரல் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் .

கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு கொள்வனவு செய்ய முன்வருவோர் குறித்த கேள்விகோரல் படிவங்களை உரியவாறு பூர்த்தி செய்து இங்கு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரங்களுகமைய வைப்புத் தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலும் உள்ள சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும், மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் காணப்படும் கள்ளு விற்பனை செய்யும் நிபந்தனைகளின் படி பெற்றுக்கொண்ட சொத்துச் சான்றிதழையும் முத்திரையிடப்பட்ட கடித உறையில் இட்டு, இடது பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கடைசி நேரத்திற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அல்லது இந்த பிரதேச செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடுவதன் மூலம் குருநாகல் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப்பெறச் செய்ய வேண்டும். குறித்த கேள்விப்பத்திரத்தினை எந்தவொரு பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் கோரும் நபர்களால் கேள்விகோரல் படிவங்களைப் பூர்த்தி செய்யும் போது கேள்வி கோரல் பத்திரங்களில் மேற்கொள்ளப்படும் சகல திருத்தங்களிலும் கேள்வி கோரும் நபர் அவரது முழுமையான கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் அக்கேள்வி கோரல்கள் நிராகரிக்கப்படும்.

2025, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி மற்றும் மு.ப. 10.30 மணியுடன் அக்கேள்விப் பத்திரங்கள் இறுதியாக ஏற்றுக்கொள்ளப்படும். குறித்த நாளில் அத்தருணத்தில் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

காரணங்கள் எதுவும் அறிவிக்காமல் கேள்விப் பத்திரமொன்றை அல்லது எல்லா கேள்விப் பத்திரங்களையும் நிராகரிப்பதற்கான உரிமை பிரதேச செயலாளருக்கு உண்டு.

தனிச் சிறப்புரிமை பெற்றவர் என அறிவிக்கப்பட்டதன் பின்னர் பொருத்தமான கேள்விதாரர் என தெரிவுசெய்யப்பட்டதும், அறிவித்தல் கொடுக்கப்பட்ட திகதி பி.ப. 3.00 மணிக்கு குருநாகல் பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பிணைப் பணத்தை வைப்புச் செய்து விற்பனை நிபந்தனைகளில் கையொப்பமிடல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் பொருத்தமான கேள்விதாரரின் சிறப்புரிமை செல்லுபடியாகும் தினத்தில் கள்ளுத் தவறணை திறக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, கள்ளுத் தவறணைகளை நடாத்திச் செல்வதற்காக ஒரு பொருத்தமான இடமொன்றினைப் பெற முடியாதவிடத்து அதற்கான ஒரு இடத்தைத் தேடுவதற்கு பிரதேச செயலாளர் கட்டுப்பட்டிருக்கமாட்டார். என்றாலும், கேள்விதாரர் எந்தவொரு இடத்திலும் தவறணையை திறப்பதற்கு பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். சிறப்புரிமை செல்லுபடியாகும் தினத்திற்கு குறைந்தது பதினான்கு (14) நாட்களுக்கு முன்னர் அவ்வங்கீகாரத்தைப் பிரதேச செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.

2025, ஓகத்து மாதம் 19 ஆந் திகதிக்கு குத்தகைகளை விற்பனை செய்வதில் திருப்திகரமான கோரலொன்று இல்லாதிருப்பின் 2025, செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீண்டும் குத்தகைகளை விற்பனை செய்யும் நடவடிக்கை இந்த அலுவலகத்திலே நடைபெறும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் குருநாகல் பிரதேச செயலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டபிள்யூ. எஸ். சேனாதிஸ்ஸ,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
குருநாகல்.
2025, யூன் மாதம் 09.

**அட்டவணை**

| *இலக்கமும் பெயரும்* | *பத்துவ* | *கள்ளுத் தவறணை திறக்க வேண்டிய பிரதேசம்* | *கேள்விப்பத்திர வைப்புத் தொகை* | *கேள்விப்பத்திரம் முடியும் திகதியும் நேரமும்* | *தவறணைகள் திறக்கப்படும் நேரம்* | *தவறணைகள் மூடப்படும் நேரம்* |
|---|---|---|---|---|---|---|
| இலக்கம் 02 குருநாகல் | வேஉடவில்லி ஹத்பத்துவ | மாநகரப் பிரிவு 01,09,10,11,12 | ரூபா 3000.00 | 2025, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி மு.ப.10.30 மணிவரை | மு.ப.10.00 மணி முதல் பி.ப.9.00 மணி வரை | பி.ப.9.00 மணி முதல் மு.ப.10.00 மணி வரை |

06- 134

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**அறிவித்தல்**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் 2025, மே 26 முதல் அமுலுக்கு வருமாறு கீழே குறிப்பிடப்படும் கம்பனியின் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.**

*பெயர் :* எல்.ஓ.எல்.சீ. இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங்ஸ் டென் (பிரைவட்) லிமிட்டட்
*பதிவு இல. :* PV 00268211
*பதிவு முகவரி:* 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, ராஜகிரிய
*புதிய கம்பனி பெயர் :* ப்ரவுண்ஸ் டீ ப்ரோகர்ஸ் ( பிரைவட்) லிமிட்டட்

LOLC கோர்பரேட் சேர்விசஸ் ( பிரைவட்) லிமிட்டட்
செயலாளர்கள்.

2025, யூன் 03.

06-95

---

**அபான்ஸ் ஜுங் பூங் ( தனியார் ) லிமிடெட்**
**நிறுவன இல.:** PV 19264

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 346(1) இன் கீழ் அறிவிப்பு

கொழும்பில் உள்ள, மேல் மாகாண வர்த்தக உயர் நீதிமன்றத்தினால், வழக்கு இல. HC (civil) No. 54/ 2010/ CO இற்கு, 2025, மாச்சு 28 ஆந் திகதி வழங்கப்பட்ட கட்டளையின் மூலம், அலுவலக முகவரியாக ஏ.ஐ.மகான் மார்க்கர் அண்ட் கோ. ( பட்டயக் கணக்காளர்கள்) இல. 46- 2/1, 2 ம் மாடி, லோரிஸ் வீதி, கொழும்பு 4 ஐ கொண்டுள்ள ராஜன் நைல்ஸ் , பட்டயக் காணக்காளர் ஆகிய நான், மேல் குறிப்பிடப்பட்ட நிறுவனத்தை ஒடுக்கும் (கலைக்கும்) நோக்கில் ஒடுக்குபவராக (கலைப்பாளராக) நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை இதன் மூலம் அறிவிக்கின்றேன்.

ராஜன் நைல்ஸ்,
பட்டயக் கணக்காளர்.

ஏ.ஐ. மகான் மார்க்கர் அண்ட் கோ,
இல.46-2/1-2, 2 ஆம் மாடி, லோரிஸ் வீதி,
கொழும்பு 4.

06- 102

## ஒருங்கிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்

### டிப்ட் புரடக்ட்ஸ் பிஎல்சி ( PQ 60) மற்றும் டீபிஎல் பிரீமியர் க்ளோவ்ஸ் லிமிடெட் (PB 5162) என்பவற்றின் ஒருங்கிணைப்பு தொடர்பானது

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ("சட்டம்") கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 242(3) (ஆ) இன் கீழ், டிப்ட் புரடக்ட்ஸ் பிஎல்சி (கம்பனி இலக்கம் PQ 60) மற்றும் டீ பி எல் பிரீமியர் க்ளோவ்ஸ் லிமிடெட் ( கம்பனி இலக்கம் PB 5162) ஆகியவை சட்டத்தின் பிரிவு 242 இன்படி ஒரே நிறுவனமாக இணைக்கப்படுகின்றன என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் டிப்ட் புரடக்ட்ஸ் பிஎல்சி என இருக்கும், மேலும் இந்த இணைப்பு 2025, ஓகத்து 1 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமான டிப்ட் புரட்க்ட்ஸ் பிஎல்சி யின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், இலக்கம் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 இல் இயங்கும்.

ஒருங்கிணைப்பு முன்மொழிவின் பிரதிகளை, இணைந்த நிறுவனங்களின் எந்தவொரு பங்குதாரர் அல்லது கடன் வழங்குநராலும் அல்லது இணைந்த நிறுவனங்களில் பொறுப்பில் உள்ள எந்தவொரு நபராலும், இலக்கம் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 இல் சாதாரண வியாபார நேரங்களில் பார்வையிடலாம்.

சபைகளின் உத்தரவின்படி,

டிப்ட் புரடக்ட்ஸ் பிஎல்சி மற்றும்,
டீ பி எல் பிரீமியர் க்ளோவ்ஸ் லிமிடெட்,
ஹேலிஸ் குரூப் சர்வீசஸ் ( பிரைவேட்) லிமிடெட்,
செயலாளர்கள்.

இலக்கம் 400,
டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2025, யூன் 10.

06- 104

---

## பொது அறிவித்தல்

### நிறுவனத்தின் பெயர் மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(2) இன் அடிப்படையில், நெகஸ் -ஜென் ஏசியா ( பிரைவட்) லிமிட்டட் ஆனது, அதன் பெயரை நெகஸ் -ஜென் இன்ஜினியரிங் ஸ்டூடியோ (பீவிடீ) எல்டீடி என 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 8 இன் விதிகளின்படி மாற்றியமைத்துள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றது .

*நிறுவனத்தின் முன்னைய பெயர் :* நெகஸ் -ஜென் ஏசியா ( பிரைவட்) லிமிட்டட்
*பதிவு இல. :* PV 96469
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:* இல.400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
*நிறுவனத்தின் புதிய பெயர் :* நெகஸ் -ஜென் இன்ஜினியரிங் ஸ்டூடியோ (பீவிடீ) எல்டீடி

சபையின் உத்தரவின்படி,

ஹேலிஸ் குழு சேவை ( பிரைவேட்) லிமிடெட்,
செயலாளர்கள்.

இலக்கம் 400,
டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2025, யூன் 09.

06- 107

## பொது அறிவித்தல்

### கம்பனி நிலை (Status) மாற்றம்

கெப்பிட்டல் எலயன்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட் ( கம்பனி) அந்தஸ்த்தில் ஏற்பட்ட மாற்றம் சம்பந்தமாக பங்குதாரர்களால் நிறைவேற்றப்பட்ட ஒரு விசேட தீர்மானத்தை தொடர்ந்து கம்பனியின் நிலை பின்வரும் முறையில் 2025, மே 30 ஆந் திகதியிலிருந்து மாற்றப்பட்டது என 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் ( திருத்தப்பட்டவாறு) விதிகளுக்கு ஏற்ப இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

*முன்னைய பெயர் :* கெபிடல் எலயன்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்
*கம்பனியின் இலக்கம் :* PB 1456
*கம்பனியின் பதிவு அலுவலக முகவரி:* லெவல் 5, மில்லேனியம் ஹவுஸ் 46/58, நவம் மாவத்தை, கொழும்பு 02
*புதிய பெயர் :* கெபிடல் எலயன்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எஸ்எஸ்பி கோப்பரேட் சேர்விசெஸ் ( பிரைவட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

06- 110

---

## பொது அறிவித்தல்

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் 320(1) ஆம் பிரிவின் பிரகடனமான அறிவித்தல்

விஷன் ஃபண்ட் லங்கா ( பிரைவேட்) லிமிடேட் - கம்பனி இல.( PV 88760)
உறுப்பினர்களின் தன்னிச்சையான கலைப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 319 (1) (b) பிரிவின்படி, இலக்கம் 09- 1/2, 03 ஆவது மாடி, பள்ளி பாதை, கொழும்பு 03 இல் நடைபெற்ற நிறுவனத்தின் விஷேட பொதுக்கூட்டத்தில் ஒரு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி கம்பனியை உறுப்பினர்களின் தன்னார்வ முற்றுப்புள்ளியாக மூடுவதற்கு மற்றும் இலக்கம் 09- 1/2, 03 ஆவது மாடி, பள்ளி பாதை, கொழும்பு -03 இன் பட்டயக்கணக்காளர் திரு. சுமித் ரன்வத்த அவர்கள் கலைப்பாளராக 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி முதல் நியமிக்கப்படுவார்.

சுமித் ரன்வத்த,
நிறுவனம் கலைப்பவர்.

இல.09-1/2,
03 ஆவது மாடி,
பள்ளி பாதை, கொழும்பு 03.

06- 115/ 1

---

## பொது அறிவித்தல்

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் 346(1) ஆம் பிரிவின் பிரகடனமான அறிவித்தல்

விஷன் ஃபண்ட் லங்கா ( பிரைவேட்) லிமிடேட் - கம்பனி இல.( PV 88760)
கலைப்பாளராக நியமிப்பதற்கான அறிவிப்பு

இல. 09- 1/2, 03 ஆவது மாடி, பள்ளி பாதை, கொழும்பு 03 எனும் முகவரியைச் சேர்ந்த பட்டயம் பெற்ற கணக்காளரான சுமித் ரன்வத்த ஆகிய நான், 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதியன்று இக்கம்பனியின் அதிவிஷேட பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட விஷேட தீர்மானத்திற்கு அமைய ஒரிஃப்ளேம் லங்கா (பிரைவேட்) லிமிடேட் கம்பனியின் கலைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளேன் என இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

சுமித் ரன்வத்த,
நிறுவனம் கலைப்பவர்.

இல.09-1/2,
03 ஆவது மாடி,
பள்ளி பாதை, கொழும்பு 03.

06- 115/ 2

**பொது மக்களுக்கான அறிவித்தல்**
**பெயர் மாற்றம்**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) இன் அடிப்படையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் நிலை பிரைவேட் லிமிடெட் என்பதிலிருந்து பப்ளிக் லிமிடெட் எனப் பெயர் மாற்றப்படுகின்றன என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

*நிறுவனத்தின் புதிய பெயர் :* நெக்ஸ் - ஜென் இன்ஜினியரிங் ஸ்டுடியோ லிமிடெட்
*நிறுவனத்தின் முன்னாள் பெயர் மற்றும் பதிவு இலக்கம் :* நெக்ஸ் - ஜென் இன்ஜினியரிங் ஸ்டுடியோ ( பிரைவேட்)லிமிடெட் PV 96469
*பதிவு செய்யப்பட்ட முகவரி:* இலக்கம் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10

**மேற்கூறிய சபைகளின் உத்தரவுகளின் பேரில்,**

ஹேலீஸ் குரூப் சர்வீசஸ் ( பிரைவேட்) லிமிடெட்,
செயலாளர்கள்.

2025, யூன் 25.

**06- 178**

---

# ஏல விற்பனைகள்

## யூனியன் பேங்க் ஒஃ ப் கொழும்பு பிஎல்சி
## பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை

ஆதன இடாப்பு

சப்பிரகமுவ மாகணம், இரத்தினபுரி மாவட்டம், கொலன்ன கோளை, தியபொதகம் பத்துவ, எம்பிலிபிட்டிய மாநகர சபை எல்லையினுள் எம்பிலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் உடகம கிராம அலுவலர் பிரிவில் எம்பிலிபிட்டிய உடகம கிராமத்தில் அமைந்துள்ள "வெவகாவவத்த" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் எச்.எம்.ஏ. யூ. நவரத்ன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 982 மற்றும் 2017.04.04 என்ற வரைபடத்தில் நிரூபிக்கப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 01 என்ற காணிப்பகுதியின் விஸ்தீரணம் (0ஏ.0றூ.30.5பே.) மற்றும் 0.3806 ஹெக்டயார்.

விசாலமுள்ள காணித்துண்டு மற்றும் அதனுள் அமைந்துள்ள கட்டிடம், இலைகுழை, பயிர்ச்செய்கை, பழங்கள் ஆகிய அனைத்து சகலதும் மற்றும் இல. 7700 என்ற வரைபடத்தில் மற்றும் இல. 7166 என்ற வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட பிரதான வீதி வரை வீழ்ந்து கிடக்கும் பாதை உரிமையோடும். இந்தக் காணி எம்பிலிபிட்டிய காணிப் பதிவு அலுவலகத்தில் L138/ 38 என்ற இருமடிப்புத்தாளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டிய , உடகம, குரே அன்ட் சன்ஸ் வியாபாரத்தை மற்றும் எம்பிலிப்பிட்டிய, உடகம , இரத்தினபுரிவீதி, ப்ரோசன் விலா ஹோட்டல் வியாபாரத்தை முத்துதந்திரி பட்டபெதிகே மெனுக தில்ஹான் குரே ( தேசிய அடையாள அட்டை இல. 198715903205 என்ற) மற்றும் குருகே ரேணுகா தமயந்தி அல்லது ரேணுகா தமயந்தி குரே ( தேசிய அடையாள அட்டை இல. 617580144X என்ற) (இங்கு இதன் பின்னர் " பிணையாளி/ ஈட்டாளர்" ஆக அறியப்படுகின்ற) என்பவரினால் கம்பனியின் பதிவு இலக்கம் PB 676PQ என்ற யூனியன் வங்கி ஒப் கொழும்பு பிஎல்சி ( இதன் பின்னர் "யூனியன் வங்கி" என அறிமுகப்படுத்தப்படும்) ஏனைய முழு வசதிகளின் பெற்றுக்கொள்வதற்காக , மேற்குறித்த குருகே ரேணுகா தமயந்தி அல்லது ரேணுகா தமயந்தி குரே என்பவரின் பிரசித்த நொத்தாரிசு என். ஆர். பண்டார அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 3660 மற்றும் 2017.05.31 ஆந் திகதியுடைய ஆரம்ப ஈட்டு முறி மற்றும் அதே பிரசித்த நொத்தாரிசு அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 4115 மற்றும் 2018.04.11 ஆந் திகதியுடைய ஈட்டு முறியை எழுதி கையொப்பமிடப்பட்டு , யூனியன் வங்கிக்கு அறவிடப்பட வேண்டிய தொகை மற்றும் அதன் மீதுள்ள வட்டியை மீளளிப்பதற்காக இங்கு மேலே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விபரமாக விஸ்தரிக்கப்பட்டுள்ள காணியை பிணையாக ஈடுவைக்கப்பட்டுள்ளதனாலும் யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி மூலம் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,

2025, யூலை மாதம் 21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு
மேல் சொல்லப்பட்ட காணியை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**காணிக்குச் செல்லும் விதம்:** எம்பிலிப்பிட்டிய மணிக்கூடு சந்தியிலிருந்து இரத்தினபுரி வீதியில் 1.2 கிலோமீற்றர் பிரயாணம் செய்யும் பொழுது அடையும் 53/ 8, பொக்குவ அல்லது 53 கி.மீ. சந்தி தூணை தாண்டி செல்லும் பொழுது 200 மீற்றர் முன்நோக்கி தல்கஸ்வத்த வீதியில் இடது பக்கம் திரும்பி 125 மீற்றர் வரை முன் பிரயாணம் செய்யும் பொழுது இந்த காணியை அடையலாம்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் பாங்க் பிஎல்சி பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%;
(4) உள்ளூராட்சி மன்ற வரி 1%;
(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றைய செலவுகள் 100%;
(6) இலிகிதர் கட்டணம் 1,500.00 ரூபா;
(7) நொத்தாரிசு கட்டணம் ரூபா 3,500.00.

இந்த ஏலவிற்பனையை சுகாதாரஅமைச்சு மூலம் கொவிட்-19 சம்பந்தமாக வெளியிட்டிருக்கும் வழிகாட்டல்களுக்கு அமைவாக நடைபெறும்.
சட்டப்பிரிவு திணைக்களம், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி, இல. 64, காலி வீதி, கொழும்பு -03.
தொலைபேசி இலக்கம் : 011- 2374100.

எல்.பி. சேனாநாயக்க ,
உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர்,
மதிப்பீட்டாளர் மற்றும் கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம்,
மேல் மாகாணம், கொழும்பு மாவட்ட நீதிமன்றம்,
அரச மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 7/1/10,
1 ஆவது மாடி,
சுப்பர் மார்க்கட் கட்டிடத் தொகுதி, பொரல்ல,
கொழும்பு -08.

தொலைபேசி இலக்கம் : 011- 2396520.

06- 114

---

**யூனியன் பேங்க் ஒஃ ப் கொழும்பு பிஎல்சி**
**பகிரங்க பொது ஏல விற்பனை**

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் )
சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை

யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சியின் பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு அலவத்துகொட, விஜிதா வீதி, இல.62, என்ற முகவரியில் வசிக்கும் தலகஸ்தன்னே கெதர சமீர பிரசங்க சோமரத்ன என்றழைக்கப்படும் தல்கஸ்தண்ணே கெதர சமீர பிரசங்க சோமரத்ன (தே.அ.அ.இல. 861781216V ஐ உடையவர்) என்பவர் "கடப்பாட்டாளர்கள்" என்ற வகையில் பணம் செலுத்தத் தவறியுள்ளார். அதனால் யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சீ என்ற பெயரில் பிரசித்த நொத்தாரிசு பீ.கே. அபேசேகர என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.09.26 ஆந் திகதியிடப்பட்ட 3560 ஆம் இலக்க முதன்மையான ஈட்டுமுறியின் மூலம் மூலம் யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சி எனக்கு வழங்கிய அதிகாரத்தின்படி, முதல் மற்றும் இரண்டாவது அட்டவணைகளில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தானது,

**முதலாவது அட்டவணை**

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், உடகம்பஹா கோரளையின் ஹாரிஸ் பத்துவே அக்குறணை பிரதேச சபை எல்லைகள் மற்றும் அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவிற்குள், கொட்டகலை கிராம அலுவலர் பிரிவுக்குள், கொனககல கிராமத்தில் அமைந்துள்ள தம்பகொல்லே ஆரம்பா மண், மரங்கள், தோட்டம் மற்றும் அதன் மீது நிற்கும் அனைத்தும் அடங்களான காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜே.பி.என். ஜயசுந்தர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004.10.07 ஆந் திகதி இடப்பட்ட 4515 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அளவீ செய்யப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு இரண்டு றூட் மற்றும் முப்பத்தாறு தசம் ஒன்பது நான்கு பேர்ச் (0ஏ.2றூ. 36.94பே.) அல்லது பூச்சியம் தசம் இரண்டு ஒன்பது ஐந்து ஏழு ஹெக்டயார் (0.2957) வரைபட இலக்கம் 4515 இன் படி மற்றும் கண்டி காணிப் பதிவேட்டில் தொகுதி/ பக்கம் எச் 881/ 55 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நடைபாதை மற்றும் வாகனப் போக்குவரத்திற்கான உரிமை மற்றும் மின்சார கேபிள்கள், மேல்நிலை கம்பிகள், வடிகால் குழாய்கள், நீர் குழாய்கள் மற்றும் இணைப்புகள் மற்றும் பிற ஒத்த வடிவமைப்புகள் மற்றும் சாலைகளுக்கான ஒதுக்கீட்டின் கீழ் மற்றும் நெடுகிலும் உள்ள எந்தவொரு அல்லது இயற்கையான வசதிகளையும் அமைக்கும் மற்றும் நிறுவும் உரிமையுடன்.

**இரண்டாவது அட்டவணை**

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், உடகம்பஹா கோரளையின் ஹாரிஸ் பத்துவே அக்குறணை பிரதேச சபை எல்லைகுள் மற்றும் அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவிற்குள், கொட்டகலை கிராம அலுவலர் பிரிவுக்குள், கொனககல கிராமத்தில் அமைந்துள்ள தம்பகொல்லே ஆரம்பா மண், மரங்கள், தோட்டம் மற்றும் அதன் மீது நிற்கும் அனைத்தும் அடங்களான காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜே.பி.என். ஜயசுந்தர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004.10.07 ஆந் திகதி இடப்பட்ட 4515 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அளவீடு செய்யப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு இரண்டு றூட் மற்றும் நான்கு தசம் ஏழு பூச்சியம் பேர்ச் (0ஏ.2றூ. 4.70பே.) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் ஒன்று ஒன்று ஒன்பது பூச்சியம் ஹெக்டயார் (0.01190) வரைபட இலக்கம் 4515 இன் படி மற்றும் கண்டி காணிப் பதிவேட்டில் தொகுதி/ பக்கம் எச் 881/ 56 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்போது தொகுதி / பக்கம் ஆர்/ 76/76 க்கு மாற்றப்பட்டது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:** அலவதுகொட நகர மையத்திலிருந்து கண்டி வீதியில் சுமார் 2.2 கி.மீ. தூரம் சென்ற பிறகு மலகமந்தெனிய வீதியில் இடதுபுறம் திரும்பி, 14/ 4 ஆம் இலக்க கல்வெட்டியிலிருந்து சுமார் 50 மீற்றர் சென்ற பிறகு, கோணகலகல அம்பலமவுடன் டி சந்தி வரை சுமார் 900 மீற்றர் சென்ற பிறகு, இடதுபுறம் திரும்பி சுமார் 400 மீற்றர் சென்று வலதுபுறம் திரும்பி, தனியார் வீதிக்கு சென்று சுமார் 20 மீற்றர் தூரம் வரை சென்ற பிறகு, குறித்த சொத்து, வீதியின் முடிவில் அமைந்துள்ளதுடன் 12 அடி அகலமுள்ள தனியார் சட்டப்பூர்வ வாகன அணுகலை தெளிவாகக் கொண்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 17ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி அமைந்திருக்கும் அதே இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களைப் பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் நூற்றுக்கு பத்து வீதம் 10%;
(2) உள்ளூராட்சி மன்ற வரி நூற்றுக்கு ஒரு வீதம் 1%;
(3) ஏலதாரரின் தரகுப்பணம் கொள்வனவு விலையின் நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து வீதம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 5,000 ரூபா;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 3,000 ரூபா;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரம் மற்றும் இதரச் செலவுகள் 100%.

கொள்வனவு விலையின் 90% வீதத்தையும் மிகுதி, இலங்கை அரசினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் வங்கி பிஎல்சி தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப்பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரிமைப்பத்திரங்களை சரிபார்க்க மற்றும் ஏனைய ஆவணங்கள் பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

சட்டப்பிரிவு, யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சி, இலக்கம் 64, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி இலக்கம் : 011- 2374100.

சந்திமா பிரியதர்ஷனி கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொடை,
ஹோமாகம.

தொலைபேசி இலக்கம் : 071- 4318252, 011-2173282.

06- 146

---

## யூனியன் பேங்க் ஒஃ ப் கொழும்பு பிஎல்சி
## பகிரங்க பொது ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை

யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சியின் பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு வரகாபொல, இஹலவெல, அராலிய உயன என்ற முகவரியில் வசிக்கும் அருமதுர வர்ணசாந்தா (தே.அ.அ.இல. 653244274Vஐ உடையவர்) மற்றும் அதே முகவரியில் வசிக்கும் சமரவீர ஆராச்சிகே நில்மினி ஷிரோஷி (தே.அ.அ.இல. 716163350Vஐ உடையவர்)என்பவர்கள் "கடப்பாட்டாளர்கள்" என்ற வகையில் பணம் செலுத்தத் தவறியுள்ளார்கள். அதனால் யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சி என்ற பெயரில் பிரசித்த நொத்தாரிசு டீ. டபிள்யூ. எஸ். விக்ரமநாயக்க என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2018.08.16 ஆந் திகதி மற்றும் 2330 ஆம் இலக்க முதன்மை ஈட்டு முறி, 2019.04.30 ஆந் திகதி மற்றும் 2426 ஆம் இலக்க இரண்டாம் நிலை ஈட்டுமுறி 2019.05.04 ஆந் திகதி மற்றும் 2429 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மூலம் யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சி யில் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தானது,

### முதலாவது அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில், பெலிகல் கோரளையின் கீரவேலி பத்துவே வரக்காபொல பிரதேச செயலக பிரிவிற்குள் வரக்காபொல பிரதேச சபை எல்லைக்குள் கஸ்னாவ கிராம அலுவலர் பிரிவிற்குள் கஸ்னாவவில் அமைந்துள்ள "பதிஞ்சிவாஹிடினாவத்த அல்லது முத்தெட்டுவ தோட்டம்" என்ற காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் ஆர்.பி.அபேகூன்/ ஆர். எம்.பி. விஜேகூன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2012.05.31 ஆந் திகதி இடப்பட்ட 2486 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 01 என அடையாளமிடப்பட்ட இடப்பட்ட காணித்துண்டு அளவீடு செய்யப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு ஒரு றூட் மற்றும் ஏழு தசம் மூன்று ஆறு பேர்ச் (0ஏ.1றூ.7.36 பே.) அதில் உள்ள அனைத்தும் அடங்களாக உள்ள காணி. இந்த சொத்து கேகாலை நிலப் பதிவு அலுவலகத்தில் தொகுதி/ பக்கம் கே 183/ 133, 134 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:** வரக்காபொல நகரத்திலிருந்து கண்டி வீதி ஊடாக தோலங்கமுவ விகாரை வரை சுமார் 6.5 கி.மீ.தூரம் சென்று இடது புறத்தில் உள்ள மங்கெதர செல்லும் வீதியில் சுமார் 1.0 கி.மீ. தூரம் வரை சென்ற பிறகு இடது புறத்தில் இந்த சொத்து அமைந்துள்ளது.

2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி அமைந்திருக்கும் அதே இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

### இரண்டாவது அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில், பெலிகல் கோரளையின் கீரவேலி பத்துவே வரக்காபொல பிரதேச செயலக பிரிவிற்குள் வரக்காபொல பிரதேச சபை எல்லைக்குள் இஹலவெல கிராம அலுவலர் பிரிவிற்குள் வரக்காபொலவில் அமைந்துள்ள ''அம்பகஹமுலஹேன இப்போது தோட்டம்'' என்ற காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் ஆர்.எம்.ஏ.கே. வீரசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.09.09 ஆந் திகதி இடப்பட்ட 2567 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 01 என அடையாளமிடப்பட்ட இடப்பட்ட காணித்துண்டு அளவீடு செய்யப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு பன்னிரெண்டு பேர்ச் (0ஏ.0றூ.12 பே.) அதில் உள்ள அனைத்தும் அடங்களாக உள்ள காணி. இந்த சொத்து கேகாலை நிலப் பதிவு அலுவலகத்தில் தொகுதி/ பக்கம் கே 08/ 126 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:** வரக்காபொலயிலிருந்து மீரிகம வலதுபுறத்திலுள்ள கான்கிரீட் வீதியில் 1.30 கி.மீ. தூரம் வரை சென்று அதே வீதியில் இன்னும் 120 மீற்றர் தூரம் வரை சென்ற பிறகு வலது புறத்தில் இந்த சொத்து அமைந்துள்ளது.

2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி அமைந்திருக்கும் அதே இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம் :** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களைப் பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் நூற்றுக்கு பத்து வீதம் 10%;
(2) உள்ளூராட்சி மன்ற வரி நூற்றுக்கு ஒரு வீதம் 1%;
(3) ஏலதாரரின் தரகுப்பணம் நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து வீதம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 5,000 ரூபா;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 3.000 ரூபா;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரம் மற்றும் இதரச் செலவுகள் 100%.

கொள்வனவு விலையின் 90% வீதத்தையும் மிகுதி இலங்கை அரசினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் வங்கி பிஎல்சி தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப்பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரிமைப்பத்திரங்களை சரிபார்க்க மற்றும் ஏனைய ஆவணங்கள் பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.
சட்டப்பிரிவு, யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சி, இலக்கம் 64, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி இலக்கம் : 011- 2374100.

சந்திமா பிரியதர்ஷனீ கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொடை,
ஹோமாகம.

தொலைபேசி இலக்கம் : 071- 4318252, 011-2173282.

06- 147

---

**யூனியன் பேங்க் ஒஃ ப் கொழும்பு பிஎல்சி**
**பகிரங்க பொது ஏல விற்பனை**

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை

யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சியின் பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு மினுவாங்கொடை, யட்டியான, சன் ஃப்ளவர் கார்டன் , இல. 171/ சி , என்ற முகவரியில் வசிக்கும் ஜெயசேகர முதலிகே மகேஷ் ரணில் ஜெயசேகர (தே.அ.அ.இல. 722761804Vஐ உடையவர்) மற்றும் அதே முகவரியில் வசிக்கும் கங்கனகே நயோமி வசந்தி கருணாரத்ன எனப்படும் கருணாரத்ன (தே.அ.அ.இல. 867282394Vஐ உடையவர்) என்பவர்கள் "கடப்பாட்டாளர்கள்" என்ற வகையில் பணம் செலுத்தத் தவறியுள்ளார் அதனால் யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சி என்ற பெயரில் பிரசித்த நொத்தாரிசு யு.பி. பிரேமதிலகா என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.07.02 ஆந் திகதி 27479 ஆம் இலக்க ஈட்டு முறி, பிரசித்த நொத்தாரிசு யு.டீ.நிலுபுன் சானிகா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2022.06.24 ஆந் திகதி 843 ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு யு.பி. பிரேமதிலகா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இரண்டுமான 2015.07.02 ஆந் திகதிய 27480 ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2019.01.29 ஆந் திகதிய 33314 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மூலம் யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சி இல் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தானது,

**முதலாவது அட்டவணை**

மேல் மாகாணத்தின், கம்பஹா மாவட்டத்தில், யட்டியான கிராமத்தில் அமைந்துள்ள கெட்டகெலகஹவத்த அல்லது அம்பகஹவத்த என்ற காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. டீ.என். செனவிரத்ன என்பவரினால் அளவீடு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட 2009.08.12 ஆந் திகதி இடப்பட்ட 7966 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அளவீடு செய்யப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு பதினைந்து தசம் ஏழு ஏழு பேர்ச் (0ஏ.0றூ.15.77பே.) மரங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அதில் உள்ள அனைத்தும் அடங்கலாக உள்ள காணி. இந்தச் சொத்து கம்பஹா நிலப் பதிவு அலுவலகத்தில் தொகுதி/ பக்கம் கே 149/ 52 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:** மினுவங்கொடை நகரத்திலிருந்து விமான நிலைய வீதியில் சுமார் 2. கி.மீ. தூரம் யட்டியன சந்தி வரை சென்று, வலது பக்கத்திலுள்ள பிரதேச சபை வீதியில் 600 மீ. தூரம் யட்டியன விகாரை மற்றும் ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தைக் கடந்தவுடன் வலது பக்கத்திலுள்ள ரணவிரு நிமல் பிரியந்த மாவத்தையில் 300 மீ. தூரம் சென்ற பிறகு வலது பக்கத்தில் இந்த சொத்து அமைந்துள்ளது.

2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி அமைந்திருக்கும் அதே இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**இரண்டாவது அட்டவணை**

மேல் மாகாணத்தின், கம்பஹா மாவட்டத்தில், அளுத்குரு கோரளையின் தாசியப் பத்துவே மினுவங்கொடை பிரதேச சபை எல்லைக்குள் மற்றும் மினுவங்கொடை பிரதேச செயலாளர் பிரிவிற்குள் இலக்கம் 123, யட்டியான கிராம அலுவலர் பிரிவிற்குள் மற்றும் "கெடகெலகஹவத்த அல்லது அம்பகஹவத்த" என்று அழைக்கப்படும் காணி, கட்டிட மரங்கள் மற்றும் அதில் உள்ள அனைத்தும் அடங்கலாக உள்ள யட்டியான கிாமத்தில் அமைந்துள்ள காணிக்கு உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. டீ.என். செனவிரத்ன என்பவரினால் அளவீடு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட 2009.08.12 ஆந் திகதி இடப்பட்ட 7965ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அளவீடு செய்யப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு பத்தொன்பது தசம் மூன்று ஒன்று பேர்ச் (0ஏ.0றூ.19.31பே.) இந்த சொத்து கம்பஹா நிலப் பதிவு அலுவலகத்தில் தொகுதி/ பக்கம் கே 572/ 30 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய நில அளவை வரைபட இல. 7965 இன் படி.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி.-** மினுவங்கொடை நகரத்திலிருந்து விமான நிலைய வீதியில் சுமார் 2. கி.மீ. தூரம் யட்டியன சந்தி வரை சென்று, வலது பக்கத்திலுள்ள பிரதேச சபை வீதியில் 600 மீ. தூரம் யட்டியன விகாரை மற்றும் ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தைக் கடந்தவுடன் வலது பக்கத்திலுள்ள ரணவிரு நிமல் பிரியந்த மாவத்தையில் 300 மீ. தூரம் சென்ற பிறகு வலது பக்கத்தில் இந்த சொத்து அமைந்துள்ளது.

2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி மு.ப. 10.15 மணிக்கு இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி அமைந்திருக்கும் அதே இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களைப் பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் நூற்றுக்கு பத்து வீதம் 10%;
(2) உள்ளூராட்சி மன்ற வரி நூற்றுக்கு ஒரு வீதம் 1%;
(3) ஏலதாரரின் தரகுப்பணம் கொள்வனவு விலையில் நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து வீதம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 5,000 ரூபா;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 3.000 ரூபா;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரம் மற்றும் இதர செலவுகள் 100%.

கொள்வனவு விலையின் 90% வீதத்தையும் மிகுதி இலங்கை அரசினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் வங்கி பிஎல்சி தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப்பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரிமைப்பத்திரங்களை சரிபார்க்க மற்றும் ஏனைய ஆவணங்கள் பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

சட்டப்பிரிவு, யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சி, இலக்கம் 64, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி இலக்கம் : 011- 2374100.

சந்திமா பிரியதர்ஷனி கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொடை,
ஹோமாகம.

தொலைபேசி இலக்கம் : 071- 4318252, 011-2173282.

06- 148

---

## யூனியன் பேங்க் ஒஃ ப் கொழும்பு பிஎல்சி
## பகிரங்க பொது ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை

யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சியின் பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு பன்னிப்பிட்டிய, கொட்டாவ, டெம்பல் வீதி, "ஷானிகா", இல. 71, என்ற முகவரியில் வசிக்கும் துஷாரி தில்ருக் ஷி ஆரியரத்ன (தே.அ.அ.இல. 728551402Vஐ உடையவர்) என்பவர் "கடப்பாட்டாளர்கள்" என்ற வகையில் பணம் செலுத்தத் தவறியுள்ளார் அதனால் யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சீ என்ற பெயரில் பிரசித்த நொத்தாரிசு டீ.என்.எச். குணரத்ன என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.05.31 ஆந் திகதி மற்றும் 1614 ஆம் இலக்க முதன்மை ஈட்டு முறி மற்றும் பிரசித்த நொத்தாரிசு எஸ்.பி.ஏ. நெலுஷிகா சில்வா அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.01.08ஆந் திகதி மற்றும் 120 ஆம் இலக்க இரண்டாம் நிலை ஈட்டுமுறிகளின் மூலம் யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சி யில் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தானது,

2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு காணி அமைந்திருக்கும் அதே இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹேவாகம் கோரளையில் பல்லே பத்துவே மஹரகம நகர சபை எல்லைக்குள் மற்றும் மஹரகம பிரதேச செயலக எல்லைக்குள் 496டீ கொட்டாவ நகரத்தின் கிராம அலுவலர் பிரிவில் கொட்டாவ கிராமத்தில் அமைந்துள்ள கொபரகஹவத்த எனும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் ஏ. ஹெட்டிகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.08.30 ஆந் திகதி இடப்பட்ட 3742 ஏ ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு மீள் அளவீடு செய்யப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்டது விஸ்தீரணம் பதின்மூன்று தசம் ஆறு பூச்சயம் பேர்ச்(0ஏ.0றூ.13.60பே.) அல்லது (0.0344 ஹெக்டயார்) மண், கட்டிடங்கள், தோட்டங்கள் மற்றும் அதில் உள்ள அனைத்தும் அடங்கலாக உள்ள காணி. தொகுதி / பக்கம் ஜி 1441 / 279 இல் பதிவு செய்யப்பட்டு இப்போது ஹோமாகம நிலப் பதிவேட்டில் சி 248/07 இற்கு மாற்றப்பட்டுள்ளது.

**மேலும், உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. ஹெட்டிகே என்பவரினால் அளவீடு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டு 2000.02.12 ஆந் திகதி இடப்பட்ட 2768 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 7 என அடையாளமிடப்பட்ட காணியின் மீதான உரிமை இதன் மூலம் வழங்கப்படுகிறது. மேலும் இந்த சொத்து ஹோமாகமவில் உள்ள நிலப்பதிவேடு அலுவலகத்தில் தொகுதி/ பக்கம் ஜி 1441/ 278 இல் பதிவு செய்யப்பட்டு இப்போது ஹோமாகம நிலப் பதிவேட்டில் சி 248/ 08 இற்கு மாற்றப்பட்டுள்ளது.**

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி.-** கொட்டாவ நகரத்தில் இருந்து ஹைலெவல் வீதி ஊடாக ஹோமாகமவை நோக்கி மஹரகம பெயிண்ட் சென்டர் வரை 300 மீற்றர் வரை சென்று இடதுபுறத்தில் உள்ள விகாரை வீதியில் 100 மீற்றர் சென்ற பிறகு வலதுபுறத்தில் உள்ள வீதியில் 200 மீற்றர் தூரம் சென்ற பிறகு அந்த வீதியின் முடிவில் இந்த சொத்து அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களைப் பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் நூற்றுக்கு பத்து வீதம் 10%;
(2) உள்ளூராட்சி மன்ற வரி நூற்றுக்கு ஒரு வீதம் 1%;
(3) ஏலதாரரின் தரகுப்பணம் கொள்வனவு விலையின் நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து வீதம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 5,000 ரூபா;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 3.000 ரூபா;

(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரம் மற்றும் இதர செலவுகள் 100%.

கொள்வனவு விலையின் 90% வீதத்தையும் மிகுதி இலங்கை அரசினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் வங்கி பிஎல்சி தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப்பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரிமைப்பத்திரங்களை சரிபார்க்க மற்றும் ஏனைய ஆவணங்கள் பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

சட்டப்பிரிவு, யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சி, இலக்கம் 64, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி இலக்கம் : 011- 2374100.

சந்திமா பிரியதர்ஷனி கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொடை,
ஹோமாகம.

தொலைபேசி இலக்கம் : 071- 4318252, 011-2173282.

06- 149

---

## யூனியன் பேங்க் ஒஃ ப் கொழும்பு பிஎல்சி
## பகிரங்க பொது ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை

யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சியின் பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு நுகேகொடை உடஹமுல்ல, மடிவெல வீதி, இல.138/ 7 என்ற முகவரியில் வசிக்கும் கங்கணமல்கே மகேஷ் குமார பெரேரா என்றழைக்கப்படும் மண்டாவல கங்கனமலாகே (தே.அ.அ.இல. 891070314V உடையவர்) மற்றும் அதே முகவரியில் வசிக்கும் கங்கனமலகே சமன் பெரேரா என்றழைக்கப்படும் மண்டாவல கங்கணமலகே (தே.அ.அ.இல. 683053252 Vஐ உடையவர்) என்பவர்கள் "கடப்பாட்டாளர்கள்" என்ற வகையில் பணம் செலுத்தத் தவறியுள்ளார்கள் அதனால் யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சீ என்ற பெயரில் பிரசித்த நொத்தாரிசு நிஹாரா மேரி பெரேரா என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.05.30 ஆந் திகதியிடப்பட்ட 137 ஆம் இலக்க முதன்மையான ஈட்டு முறியின் மூலம் யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சி எனக்கு வழங்கிய அதிகாரத்தின்படி, அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தானது,

## அட்டவணை

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரலேயின் பல்லே பத்துவே மஹரகம நகர சபை எல்லைக்குள் மற்றும் மஹரகம பிரதேச செயலகப் பிரிவுக்குள் உடஹமுல்ல கிராம அலுவலர் பிரிவிற்குள் மற்றும் உடஹமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அதில் உள்ள மற்ற அனைத்தும் அடங்கிய "ஹிக்கஹா ஓவிட" என்று அழைக்கப்படும் காணி. உரிமம் பெற்ற நில அளவையாளர் என். அபேசிறி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010.01.12 ஆந் திகதி இடப்பட்ட 2007/ 49 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அளவீடு செய்யப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு ஏழு தசம் ஏழு ஒன்பது பேர்ச்(0ஏ.0றூ.7.79பே.) மேற்படி வரைபட இலக்கம் 2007/ 47 இன் படி மற்றும் ஹோமாகம காணிப் பதிவேட்டில் தொகுதி/ பக்கம் இ/ 007/98.99 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. கூறப்பட்ட வரைபட இலக்கம் 2007/ 49 இல் கூறப்பட்ட லொட் 1 என்பது உரிமம் பெற்ற நில அளவையாளர் என். அபேசிறி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010.01.12 ஆந் திகதி இடப்பட்ட 2007/ 47 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 1 மற்றும் லொட் 3 ஆகியவற்றின் கலவையாகும்.

**மேலும், உரிமம் பெற்ற நில அளவையாளர் டி.பி. அமரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1990.09.25 ஆந் திகதி இடப்பட்ட 3733 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 2 மீதான வழி உரிமையுடன்.**

2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி அமைந்திருக்கும் அதே இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:** மஹரகம சந்தியிலிருந்து, கொழும்பை நோக்கி சுமார் 900 மீற்றர் தூரம் பயணித்து வலதுபுறம் திரும்பி பழைய வீதியில் செல்லுங்கள். இந்த வீதியில் எம்புல்தெனியா சந்தி வரை பயணித்து பின்னர் வலதுபுறம் திரும்பி மடிவெல வீதியில் செல்லுங்கள். மடிவெல வீதியில் சுமார் 500 மீற்றர் தூரம் சென்று வலதுபுறம் திரும்பி 10-15 அடி அகலமான வீதி முன்பதிவு (ஃக்ளோ டெக் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் ஐ கடந்தவுடன்) வழியாகச் சென்று வலதுபுறம் திரும்பி 40 மீற்றர் தூரம் வரை சென்ற பிறகு வலதுபுறத்தில் இந்த சொத்தை அடையலாம்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களைப் பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் நூற்றுக்குப் பத்து வீதம் 10%;
(2) உள்ளூராட்சி மன்ற வரி நூற்றுக்கு ஒரு வீதம் 1%;
(3) ஏலதாரரின் தரகுப்பணம் கொள்வனவு விலையின் நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து வீதம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 5,000 ரூபா;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 3.000 ரூபா;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரம் மற்றும் இதர செலவுகள் 100%.

கொள்வனவு விலையின் 90% வீதத்தையும் மிகுதி இலங்கை அரசினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் வங்கி பிஎல்சி தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப்பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரிமைப்பத்திரங்களை சரிபார்க்க மற்றும் ஏனைய ஆவணங்கள் பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

சட்டப்பிரிவு, யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சி, இலக்கம் 64, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி இலக்கம் : 011- 2374100.

சந்திமா பிரியதர்ஷனி கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொடை,
ஹோமாகம.

தொலைபேசி இலக்கம் : 071- 4318252, 011-2173282.

06- 161

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது